1971 டிசம்பர் 15]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது அங்கே வந்துள்ள விண்ணப்பங்களின் மூலம் மொத்தம் ரூ. 28,00-க்கு கடன் மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு, நிதி நிலைக்கேற்ப ஒப்புதல் அளிக்கப்படும்.

வட்டிக்கடைகள்.

*435 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மார்வாடி கடைகள், மற்றும் வட்டிக்கடைகளில் சட்ட பூர்வ மான வட்டி விகிதங்களை பெரிய எழுத்துக்களில் விளம்பரப் பலகையில் எழுதி வைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரிக் கடன் கொடுப்பவர்கள் 12 சதவிகிதத்திற்கு மேல் வாங்கக் கூடாது என்று இருந்தாலும், அதிகமாகவே வட்டி வாங்குகிறார்கள். தாங்கள் கொடுக்கும் ஹுண்டியையும் எழுதாமல் இருக்கிறார்கள். அதைத் தடுக்க, அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அம்மாதிரி சம்பவங்கள் வரும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இந்தமாதிரி புகார்கள் வருகின்றன. ஆனால் சட்டப்படி அதை அணுகும்போது, நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. வாங்கிறவர்களும், கொடுக்கிறவர் களும், வட்டி குறைவாக எழுதினாலும், அதிகமாகவே கொடுத்து விடுகிறார்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வட்டிக்குத் தருகிறவர்கள், பல இடங்களில் கொடுப்பது ரூ. 500 ஆக இருந்தாலும், ரூ. 1000 என்று எழுதிக் கொள்கிறார்கள். அதிகப்படியான வட்டியையும் முதலிலேயே எடுத்துக் கொள் கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதைத் தடுக்க வாங்குகிற வர்கள் தான் நிதானமாக நிறுத்தும் வகையில் நடக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வாங்குகிறவர் களே தடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி அநியாயமாக, மாண்புமிகு செழியன் சொன்னது போல், முதலிலேயே வட்டியையும் எடுத்துக் கொள்கிறார்கள். இதைத் கட்டாயம் தடுக்க வேண்டும். அப்படியில்லை என்றால், வட்டிக் கடைகள் நடப்பதையே தடுக்க வேண்டும். இதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் சட்டப்படி, "ப்ரோ நோட்" எழுவதில், 'ப்ரிசம்ஷன் ஆப் ப்ரூப்" எழுதிக் கொடுத்ததில் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறது. எழுதிக் கொடுத்தவர்கள், "நான் அதிகத்தொகை வாங்கவில்லை" என்று நிரூபிக்க வேண்டும், "ப்ரிசம்ஷன்" ஐ எடுத்துவிடலாமா என்பதை சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, இந்த வட்டித் தொழில் மிகக் கொடுமையானது. அந்தக் கொடுமையான தொழிலுக்கு இரையாகிறவர்கள் பெரும் பகுதி ஏழைகள்தான். ஏழைகளுக்கு அவசியமாகத் தேவைப்படும்போழுது, "ப்ரோ நோட்" கொடுக்கிறார்கள், அவர்கள் கேட்கிறார்கள். பிறகு இதனால் அவர்கள் ஆயுளுக்கும் மாட்டிக் கொள்ளுகிறார்கள். இந்தக் கொடுமையிலிருந்து ஏழை மக்களைக் காப்பாற்ற, இந்தக் கொடும் காரியத்தைச் செய்யும் வட்டிக் கடைகளை இல்லாமல் செய்ய சர்க்கார் முடிவுக்கு வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நல்ல யோசனைகள் இருந்தால் சொல்லலாம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: கனம் அமைச்சர் யோசனை கேட்டார்கள். வட்டிக் கடைகளை மூடிவிட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசாங்கமே கடன்களை வழங்க, கடன் கேட்பவர்களின் "பர்சனல் செக்யூரிடி" யின் மேல் சொந்த ஜாமீன் பேரில் கொடுக்க, 500, 1,000 என்பதை சரியான வட்டியில் கொடுக்க வழி வகை செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: எல்லா யோசனைகளையும் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that the high cost of commodities today is due to this huge interest charges made by pawn-brokers and hundi merchants and will they seriously think in this progressive society that this should be banned and some other alternative system of credit at cheaper rate of interest must be made available to those who need it?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது "மணி லெண்டர்ஸ் ஆக்ட்" என்கிற சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் வட்டியைவிட அதிகமாக வங்கிகளில் வாங்குகிறார்கள் என்பதுதான் புகார். இதைப் பரிசீலித்து மணிலெண்டர்ஸ் ஆக்டில் பாது காப்புக் கொடுக்க ஸ்பெஷல் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். கடைகளைப் பரிசோதனை செய்து, தவறு செய்கிறவர் களை பிராசிக்யூட் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. விலையேற்றத்திற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்த முடியாது.